ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

निवृत्ता भोगेच्छा पुरुषबहुमानोऽपि गलितः
समानास्स्वर्यातास्सपदि सुहृदो जीवितसमाः ।
शनैर्यष्ट्युत्थानं घनतिमिररुद्धे च नयने
अहो मूढः कायस्तदपि मरणापायचकितः ॥

உலக சுகங்களிலிருந்த விருப்பங்களெல்லாம் விலகிவிட்டன. நம்மிடத்தில் ஜனங்களுக்கிருந்த கௌரவமும் போய்விட்டது. ஸமவயதை யுடையவர்களும் நம் பிராணனுக்கொப்பானவர்களுமான மித்திரர்களும் சுவர்க்கத்திற்குச் சென்றுவிட்டார்கள்: கோலைப்பிடித்துக் கொண்டு மெதுவாக சிரமப்பட்டு எழுந்திருக்க வேண்டியிருக்கின்றது. கண்களோ ரோகம் மேலீட்டினால் ஒன்றும் தெரியவில்லை. இவ்விதமிருந்தும் பரமமூடமான இச்சரீரமானது மரணத்தினின்றும் பயப்படுகின்றதே! என் செய்வேன்! கஷ்டம்.

மானிடருக்கு என்றைக்குப் பிறப் பேற்பட்டதோ அன்றைக்கே மரணம் நிச்சயமாயுண்டென்று அதற்கும் தயாராகவிருக்கவேண்டும். அவ்விதம் தனக்கில்லையென்று ஒருவர் கூறுகின்றார். இப்புவியிலிருந்து அனுபவிக்கவேண்டிய சுகங்கள்யாவும் அனுபவித்தாய்விட்டது. நம்முடைய மித்திரர்களும் லோகாந்தரம் சென்றுவிட்டார்கள். நம்சரீரத்துக்கு வேண்டிய சௌகரியங்களைக் கூட பிறர் அபேக்ஷையின்றி செய்துகொள்ளமுடியவில்லை. இவ்வளவு சிரமப்பட்டும் மரணத்தையடைய மனமில்லையே, என்று தானே வருத்தப்படுகின்றார். ஆகையால் நம்மெல்லோருக்கும் மரணம் நிச்சயம் உண்டென்கிற திண்ணமான எண்ணத்துடன் அந்தக்காலத்தில் நாம் கஷ்டப்படாமலிருக்க வேண்டியதற்குரிய ஸாதனங்களை இப்பொழுதே தேடிவைத்துக்கொண்டு தயாராகவிருக்க வேண்டும்,

ஸம்ஸ்கிருத பாஷாபி வித்ருதி

அவற்றுள் முதலாவதான பிராமணரல்லாதாரைக்கைதூக்கி விடவேண்டுமென்று அவர்களுக்கு பெரும்பான்மையாக உத்தியோகப்பதவிகளைக் கொடுப்பதானது, தங்களுடைய உயர்ந்த ஸம்ஸ்கிருத பாஷையை அறவே மறந்து, மேன்மையான வைதிகதர்மங்களை முற்றுந்துறந்து, வயிற்றுப்பிழைப்பிற்காக ஆங்கில பாஷையை அப்பியஸிக்கும் அந்தணர்களை "நீங்கள் உங்கள் முன்னோர்களால் அப்பியஸிக்கப்பட்ட கீர்வாணபாஷையை அப்பியஸியுங்கள்; தொன்று தொட்டு உங்கள் குலதர்மமாய் வழங்கிவந்த வைதிகாசாரங்களை பின்பற்றுங்கள்" என்றதோர் புத்திமதியென்று யாம் கருதுகின்றோம். இவ்வாறிருந்தும் ராஜீய உத்தியோகப்பதவிகளிலுள்ள பெரும் பிரமையால் பிராமணர்கள் ஆங்கிலப்படிப்பையொழிக்கவில்லையென்றாலும், தற்காலம் சட்டமாக அங்கீகரிக்கப்பட்ட யூனிவர்ஸிடி மசோதா University Bill) அமுலுக்கு வருங்கால், எளியோர்களான பலர் இத்தகைய ஆங்கிலக் கல்வியை விட்டு, புராதனமானதும், பிரும்மகுலத்தின் பெரும்புகழுக்கும் பெருமைக்கும் காரணமாயுள்ளதுமான வடமொழியையும், அதனால் வெளியிடப்பட்டதும் ஒப்புயர்வற்றதுமான இந்துமதக் கோட்பாடுகளையும் நன்கு பின்பற்றி, தற்காலம் நிலைதளர்ந்து, வலிகுறைந்து, கலைமறைந்து தலைதிரிந்து, தடுமாறி நிற்கும் இளந்திங்கள் போன்ற நம் ஆரியாசாரங்களையும், அவற்றைத் தெளிவுற விளக்கும் ஸம்ஸ்கிருத பாஷையையும் முன்னேற்றமடையும்படி செய்யப் பிரயத்தனப்

படுவார்களென்பதற்கு சிறிதும் சந்தேகமில்லை. ஆகவே நாம் பழைமையான நமது ஸம்ஸ்கிருதபாஷையை அபிவிருத்தி செய்யவும், நமது வைதிக ஸநாதன தர்மத்தை நிலைநிறுத்தவும், இவ்விரண்டும் பேருதவிகளன்றோ!

இதுநிற்க இவ்வுலகில் நாமடையவேண்டிய லோகாயதமான பொருள் முதலிய ஜடவஸ்துக்கள் பிரவர்த்திக்கும் ஸம்ஸ்கிருதப் பயிர்ச்சி உபயோகமாகும். விசேஷ தீக்ஷண்யமுள்ள புத்திமான்கள் பிரகாசித்துக் கொண்டு வரக்கூடிய சிறந்த 'கிரந்தங்கள் வடமொழியில் பல உள. அவைகளைப் பிரகாசத்திற்குக் கொண்டுவரும்படியான முயற்சி செய்பவர்களுக்குத் தகுந்த வெகுமதியும் கிடைக்கும். மேலும் உலகத்திலுள்ள வித்வத் சங்கத்தில் ஸம்ஸ்கிருத நூல்களுக்கு மிகவும் சரியான மொழிபெயர்ப்பு விசேஷத்தேவை. அவ்விடங்களில் காலஞ்சென்ற டாக்டர் ராஜேந்திரலால் மித்ரரென்ன, தற்கால நிபுணரான ஸர். ஜான். உட்ரோபி. (Sri john Woodroffe) என்ன இவர்களுடைய பிரயாஸை வீண்போகமாட்டாது. அவைகளை ஜனங்கள் மிக்க அன்புடன் எதிர்பார்ப்பார்கள். ஆனால் இவ்வித முயற்சிசெய்வதற்கு ஆங்கிலபாஷா ஞானம் நன்றாயிருக்கவேண்டும். தெய்வானுகூலமாய் நமது நண்பர்களுக்குள் இது கொஞ்சமேனும் குறைவில்லை. இவ்வேலைக்குத்தகுதியுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் மற்றவேலைகளைவிட்டு தங்கள் வாழ்நாட்கள்யாவற்றையும் இம்முயற்சியில் செலவழித்தார்களானால் வெகு ஜனங்களுக்குப் பொதுவான பெரும்நன்மையைச்செய்வதுடன் தாங்கள் உலக வியாபாரத்திலிருந்து ஏராளமான பொருளையும் ஈட்டலாம். இந்தியாமுழுவதும் ஸம்ஸ்கிருத பாடசாலைகளும் ஏற்படுத்த வேண்டும். இப்பெருங்காரியத்திற்குப் பொருளுதவியும், அறிஞர்களின் சகாயமும் வேண்டுமாதலால், செல்வவந்தர்களும் அறிஞர்களும் முன்வந்து தம்மாலியன்ற முயற்சி செய்வது அவர்களுக்கே ஓர் பெரும்பாக்கியமாகும். இவ்வாறு ஸம்ஸ்கிருத வித்யாசாலைகள் எங்கும் ஏற்படுத்தவதால், அப்பாஷை அபிவிருத்தியடைவது மன்றி விசேஷமாய் வடமொழிபயின்ற

புத்திமான்களுக்கும் ஜீவனோபாயமும் கிடைக்கும். ஸம்ஸ்கிருத பாஷையை படிப்பதின் பயன் இதுமாத்திரமோ! உதயமுதல் அஸ்தமனபரியந்தம் பொருளைத் தேடுவதற்கு ஒவ்வொருவரும் முயலுமிந்த ஜடமாயாவாதங்கள் விசேஷித்த இக்காலத்தில் அயர்ந்து கிடக்கும் ஆத்மாவுக்கு உபநிஷத்துக்கள் தர்சனங்கள் பகவத்கீதை, முதலான கிரந்தங்களிலுள்ள சிறந்த வேதாந்த ஸாரங்களைப்படித்து அதனாலுண்டாகும் ஆனந்தத்தை யனுபவிப்பதைத்தவிர வேறொன்றுமில்லை. ஆனால் நாம் ஸம்ஸ்கிருத சாஸ்திரங்களைப் படிப்பதுமாத்திரமல்லாமல் நாம் முக்தியடையவேண்டியதின் பொருட்டு அவைகளில் கூறியிருக்கும் விதிகளையும் நன்கு அநுஷ்டிக்கவேண்டும். இவைகளையெல்லாம் நோக்குங்கால் ஸம்ஸ்கிருதப் படிப்பானது நம்முடைய இந்த ஆயுளுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதுமன்றி வரப்போகின்ற ஆயுள்களுக்கும் கொடுக்கின்றதென்பது நிச்சயமே. அதாவது இம்மானிடப் பிறவியின் காரணங்களாகிய தர்மார்த்த காமமோக்ஷங்களை ஒருவன் ஸம்ஸ்கிருதத்தைக்கிரமமாய்ப் படிப்பதால் அடையலாமென்பது திண்ணம். ஆகவே பழைமையான நமது வைதிகதர்மங்களை நன்கு கடைப் பிடித்தொழுகுவதற்கு தற்காலம் சீர்குலைந்து கிடக்கும் நமது ஸநாதனதர்மத்தை நிலைநிறுத்துவதற்கும், அவற்றை வெளியிடும் வடமொழிப்பயிற்சியே முக்கிய காரணமாதலால், இச்சம்ஸ்கிருத பாஷாபிவிருத்திக்கு இன்றியமையாதவையான, ஸம்ஸ்கிருதபாடசாலை ஸ்தாபனங்களின் பொருட்டும், வடமொழிப் பத்திரிகைகளின் முன்னேற்றத்தின் பொருட்டும், நமது இந்து ஜனங்கள் தங்களாலியன்ற மட்டும் உதவிபுரிந்து, அதிப்பிராசீனமான நமது இந்துமதத்தின் பெருமையையும், அதைநன்குவிளக்கும் நமது வடமொழியின் பெருமையையும், ஸ்தாபிக்குமாறு மிகவும் வேண்டுகின்றோம்.

சுபம்

இந்துதேச வைத்தியம்.

நம் புராதனவைத்தியர்களுக்கு பின்வந்தவர்களின் ஊக்கம் குன்றியதாலும், மற்றும் அவர்கள் அத்தகைய ரணவைத்திய சிகித்ஸையில் கவனம் செலுத்த முடியாவண்ணம் பற்பல இடுக்கண்கள் நேர்ந்தபடியாலும், நம்பிராசீன இந்து வைத்திய முறையானது க்ஷீணதசையை அடைவுற்றது. 'மேனுட்டு நிபுணர்களோவெனில்,' ஏராளமான பொருட் செலவையும் பொருட்டு செய்யாது அதிக ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும், தங்கள் வாணுள்முழுவதும் அதில் பாடுபட்டு உழைத்தமையால் இறுதியில், பற்பல அருமபெரும் விஷயங்களேயும், அதற்குற்ற உபகரணங்களேயும் கண்டுபிடித்து, இந்த ரணவைத்தியத்தில் (Surgery) மிகவும் முன்னேற்ற மடைந்தவர்களாக ஆய்விட்டனர். ஆகவே இத்தகைய ரணசிகித்ஸையில், நம் இந்துதேச வைத்தியர்களுக்குத் தற்கால மேற்பட்டிருக்கும் ஞானக்குறைவானது, அவர்களுக்கு அதில் ஊக்கமில்லாத காரணம் பற்றியே யன்றி, அவர்களுக்கு அஃது தெரியாததால் அல்ல என நிச்சயமாய்க்கூறலாம்.

வியாதியின் நிதானம்.

இந்துக்களது வைத்தியநூல்கள், தாதுவின் நிதானம், சர்மம் நாக்கு கண் இவைகளின் நிறம், மலஜனங்களின் தன்மை வாக்கின் தொனி, சுவாஸத்தின் போக்கு ஆகிய இவைகளேப் பரீக்ஷை செய்தால் அநுபவமுள்ள வைத்தியனுக்கு நோயாளியின் வியாதி இன்னதென்று தெள்ளெனப்புலப்படுமென்று கூறுகின்றன. ஆனுல் தாது பரீக்ஷையே மிகச் சிரேஷ்டமாக எண்ணப்படும்.

தாதுவைக்கொண்டே வியாதி யின்னதென்று கண்டுபிடிப்பது மன்றி, ஒருவன் இவ்வளவுகாலம் ஜீவித்திருப்பானென்று நிர்ணயிக்கவும் கூடும். ஒருவன் இவ்வளவு நாட்கள் உயிருடன்

ஜீவிப்பானென்று சரியாய்க்கண்டு கூறிய வைத்தியர்கள் சமீப காலத்திலுமிருந்ததாக அனேகர் கூறுகின்றனர். எது எப்படியாயினும் தாது நிதானிப்பதில் நம்மவர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களென்பதை எவரும் மறுக்கமுடியாது. வியாதி அசாத்தியமென்று பின்வரும் ஏதுக்களிருக்குமாயின் கூறலாம். அவையாவன:—வாக்கடைப்பு, தடுமாற்றப்பேச்சு, வாயுளறல், ஞாபகமின்மை, சுவாஸ இழுப்பு, கண்மலர்ச்சி, அயுக்தமான பதார்த்தங்களின்மேல் அவா, கைகால் வலித்தல், கை வைத்தவுடன் இடமும் வலமுமாய் நிலைதடுமாறும் தாது, தேகம் ஜில்லிடுதல், மார்புலர்ச்சி, நாக்கு கண்கீல் இவைகளின் பக்கவெளுப்பு, பீஜவீக்கம், தீய்ந்தும் உலர்ந்தும்போன மலம் கை, கால் வயிறு, முக்யமாய் தொப்புளைச்சுற்றிய வீக்கம், வெளியில் வருதலேயில்லாத மலபந்தம், அன்னாகாரம் நீராருந்துதல் இவைமுற்றுமின்மை, ஓயாக்கொட்டுவாய், ஓயா இருமல், தீராத்தாகம், கண் உள் விழுதல், முதலியவைகளாம்.

வைத்தியர்களின் லக்ஷணம்.

வைத்தியன் சாஸ்திர ரீதியாயும், குருமுகமாயும் சகல வைத்திய சாஸ்திரங்களையும் கற்கவேண்டும். அப்படிக்கற்றுணர்ந்த பின்னரே ஒருவன் அநுபவ வைத்தியத்திற்குத் தகுதியுள்ளவனாவான். நூற்களைமாத்திரமே கற்று, அநுபவமின்றி வைத்தியஞ்செய்யப் புறப்படுபவன், படையைக்கண்டு அஞ்சும் பயங்கொள்பவனைப்போல், வியாதியைக்கண்டு அஞ்சுவான். தக்கபடிப்பில்லாமல் அநுபவத்தையே ஆதாரமாகக்கொண்டு வைத்தியஞ்செய்யத்துடங்குபவன் கற்றோர்களால் நன்கு மதிக்கப்படமாட்டான். அத்தகையோனை தயை தாக்ஷிண்ணியமின்றி அரசன் அத்தொழிலினின்றும் விலக்க வேண்டியதாம். ரண வைத்தியம் காயவைத்தியங்களில், ஒரு வைத்தியத்தை மாத்திரம் கற்றவன் ஒரு இறகுள்ள பக்ஷிக்குச் சமானமாவானும். வைத்திய ஞானமில்லாதவனிடத்தில் தேவாமிருத மிருந்தாலும் அதைக்காலகோடிவிஷமாகப் பாவிக்கவேண்டியதாம். அரைகுறையாய்ப் படித்து வைத்தியஞ்செய்பவன் தனது அறி

வீனத்தாலும், அரசாங்கத்தாரின் விசாரணைக்குறைவாலும், வியாதிஸ்தனுக்கு இயமனைப்போலாகிறான். சகல இலக்கணமுடைய வைத்தியனே, ரோகஸ்தனென்னும் சத்துருப்படையின்மத்தியில் அஞ்சாது ரதத்தைச்செலுத்தி வெகுகம்பீரத்துதுடன் ஜயம்பெறும் வீரனாவான்.

வைத்தியன் நன்னடத்தை, ஒழுக்கம், சத்தியம், தயை, தாக்ஷிண்ணியம், ஆகிய இவைகளுடையவனாயிருக்கவேண்டும் நோயாளி, அருவருப்பினாலாவது, அவசரத்தினாலாவது, துன்பத்தைச்சகியாமையினாலாவது ஏதாவது கடுமையாய்ச்சொல்லுவானேல், வைத்தியன் அதைப்பற்றிக்குற்றம் பாராட்டல் தகாது. வைத்தியன் பார்ப்பதற்குச் சாந்தமாயும், ஆனால் தைரியமுள்ளவனாயும், நோயாளியின் வியாதியை வசப்படுத்துவோமென்ற முகமலர்ச்சியுள்ளவனாயும், சத்தியவாக்கு தயாளபுத்தி, தாராளசிந்தை சரசகுணம் இவைகளுடைய வனாகவுமிருத்தல் வேண்டும்; என்றாலும் தான் உத்திரவு செய்த பத்தியம்முதலிய விதிகளை நோயாளி செவ்வனே அனுஷ்டிக்கக்கூடிய கண்டிப்பும், பிடிவாதமும் தன்னிடத்திலமையச் செய்துகொள்ளவேண்டுவது இன்றியமையாததாம். இவ்விதலக்ஷணமுடைய வைத்தியர் கையில் நோயாளிக்கு மரணம் நேரிடுமாகில், அது நோயாளியின் தலைவிதியே யன்றி வைத்தியரின் அறிவின்மை காரணமாகப் பிறந்ததாய் மதிக்கவொண்ணாது.

சிகிச்சை.

சிகித்ஸை வியாதிக்குத் தக்கவாறு அமையுமாகையால் சிகிச்சைக்கிரமப்படி வியாதியை மூன்று பாகமாய் இந்துவைத்தியசாஸ்திரங் களினபிப்ராயப்படி வகுப்போம். ஔஷதப்பிரயோகங்களினாலும், மற்றுமுள்ள சாதாரணப் பிரயத்தனங்களினாலும் தீரவேண்டிய வியாதிகளொன்று; ஹோமம், ஜபம், தானம் தருமம் இவைகளால் நிவர்த்தியாகவேண்டியது மற்றொன்று, மந்திரத்தால் தீரவேண்டுவது மூன்றாவதான மற்றொன்று. இப்பொழுது சாதாரணமானப் பிரயோகத்தால் தீர்ப்பதைப்

பற்றி கவனிப்போம். இது சுரசம், சிந்தூரம், சூர்ணம், பஸ்பம், லேகியம், குளிகை, வடகம், தைலம், பாணிதம் மூலிகை முதலியவைகளைக்கொண்டு சொஸ்தம் செய்வதேயாம். இதுவன்றி உஷ்ணமும், குளிர்ச்சியும், வெளிச்சமும், சந்திரனது வளர்வும் தேய்வும் சிகிச்சாப் பிரயோகங்களாம். சந்திரனது கலையால் வியாதி அதிகப்படுகிறதென்றும், அதுபற்றியே மாலையில் மருந்துப் பிரமாணத்தை அதிகப்படுத்தவேண்டுமென்றும் பூர்வீக நம் வைத்திய சாஸ்திரங்களிற் கண்டிருக்கின்றது. அந்திவெய்யில் தேகத்திற்கு சௌக்கியமென ஜனங்களின் அபிப்பிராயம். மூலிகைகளிலும் இத்தேசத்தினருக்கு இன்னும், நம்பிக்கையும் ஞானமும் குறைபவில்லை. மூலிகைகளைக் கொண்டே அனேகமாய்ச் சகல வியாதிகளுக்கும் ஔஷதப் பிரயோகஞ் செய்பவருமுண்டு. மூலிகைக்குள் யாவரும் பிரமிக்கத்தக்கவுயர்ந்த குணமுள்ள மூலிகை களுண்டென்பது சில சம்பவங்களினாலும், ஜனங்களுடைய வாக்கினாலும் ஏற்படுகின்றது.

சில மூலிகைகளைக்கொண்டு யோகிகளும் சித்தர்களும் தங்கள் பசிப்பிணியை அறவே நீக்கிக்கொண்டதாகவும், கள்வர்களும் ஜாலவித்தை செய்வோர்களும் எதிரிகளின் கண்களை மறைப்பதாகவும், எப்பொழுதும் சில மூலிகைகளை உடம்பில் வைத்திருப்பதால் பல வியாதிகளை வரவொட்டாது செய்வதாகவும் பெருவியாதி முதலிய வியாதிகள் இம்மூலிகைகளின் உதவியால் ஒரே முறையில் நிவர்த்திக்கக்கூடுமென்றும், மற்றுமுள்ள இவைபோன்ற இன்னுஞ்சில சமாசாரங்களும் நமக்கு அடிக்கடி தெரியவருகின்றன. சில பூண்டுகளின் ஸ்பரிசத்தாலும், காற்றுவாடையினாலும் அனேக குணங்களும் மாறுபாடுகளும் உண்டாகுமென்பது பல பிரஸித்த வைத்தியர்களின் நம்பிக்கை. திகைப்பூண்டெனும் ஓர் மூலிகையை மிதிப்பவர்களுக்குப்புத்திமயக்கமும் மறதியுமுண்டாகித் தான் செல்ல நினைத்த் விடத்தை மறந்து சுற்றிச்சுற்றி அம்மூலிகையின் வேகமிருக்கும் வரை அலைவார்களாம். எது எவ்வாறிருப்பினும், வியாதியை வசப்படுத்தக்கூடிய சிரேஷ்டமான மூலிகைகள்

நம் தேசத்தில் வேண்டுமளவு இருக்கின்றனவென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. கிராமாந்தரங்களிலுள்ள வில்லியர்களுள் தக்கபச்சலைகள் தெரிந்தவர்கள் இன்னுமிருக்கின்றனர். தகுந்த படிப்பும், வைத்தியத் தேர்ச்சியுமுள்ளவர்களுக்கு, இவ்வில்லியர்களுக்குத் தெரிந்த அளவு தெரிந்திருக்கும் பக்ஷத்தில் அது எவ்வளவோ பிரகாசிக்கும். ஐரோப்பியர்களுக்கும் வேறு சிலருக்கும் நம்பிக்கையற்ற பல சிகித்ஸைகள் நம் வைத்திய சாஸ்திரத்தில் காணலாம். "கர்மவிபாகம்" என்னும் நூலானது ஜன்மாந்தரத்தில் செய்த இன்னன்ன கர்மங்களினால் இன்னன்ன வியாதி உண்டாகின்றதெனச் சொல்லுகின்றது. ஜன்மாந்திரமுண்டென நம்பும் நம்மவர்கள்தான் அதை நம்புவார்களேயன்றி ஜன்மாந்திரமென்பது இல்லையென அபிப்ராயப்படுபவர்கள் அதை நம்பமாட்டார்கள். ஆகிலும், புராதனமானதும் பெருமை தங்கியதுமான நமது மதத்தை நன்குபுகட்டும் சாஸ்திரங்கள் நன்குவிளக்குகின்றபடி நமக்கு ஜன்மாந்திரமுண்டாகையால், அவைகளின் கர்மப்பயனுயுள்ள வியாதிகளும் உள்ளனவென்பதே நம் உறுதியான அபிப்ராயம். இது நிற்க, பூதகணரோகங்களும், அவஸ்தைப்பிரயோக ரோகங்களும் உளவெனச் சிலர் இத்தேசத்திலும் நம்புவதில்லை. ஆனால் பத்திரிகைகள் வாயிலாகவும் மற்றும் பலவிதமாகவும் சில அதிசய சம்பவங்களைப் படிக்கும்பொழுதும் கேள்வியுறும்பொழுதும், சிற்சில சமயங்களில் அவற்றை நேரில் கண்கூடாகக் காணும்பொழுதும், "அவைகளை உறுதியாய் நம்பமாட்டேன்" என்றுநியாயங்காட்டி மறுக்க முடிகிறதில்லை.

இவ்வாறு அளவற்ற நம்பாமைக்கு தமதிஷ்டமே (My will) காரணமென, ஒருவர் கூறத்துணிவாராகில் பிரத்தியக்ஷத்தில் காண்போர் இவர் சொற்களை நம்புவது எங்ஙனம்? ஒருவருடைய வஸ்திரம் நிஷ்காரணமாய்ப் பற்றிக்கொண்டதாக பீ. ஏ. பட்டம் பெற்றவரும், சென்னையில் உயர்ந்த கவர்மெண்டு உத்தியோகப் பதவியிலிருப்பவருமான நண்பரொருவர் நவின்றதை நாம் கேட்டிருக்கின்றோம். இத்துடன், இடுமருந்து வியா

தியொன்றுண்டென்பது நம் தேசத்தவரின் நம்பிக்கை. ஸ்திரீகள் தங்களது அறிவீனத்தால் புருஷர்களைத் தங்கள் வசமாக்கிக்கொள்ளவேண்டு மென்று மருந்துகள் வைப்பது முண்டு. அதில் ஆபாசமும் தேகத்திற்குத் தீங்கிழைப்பதுமான பதார்த்தங்கள் (Poisonous drugs)சேர்க்கப்படுவதால் புருஷரின் உயிருக்கே கேடு நேரிடுகின்றதைப் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட வழக்கமுள்ள இத்தேசத்தில் அதையொரு வியாதியாய்ப் பாவித்து அதற்கு மருந்து விதிப்பதும் இன்றியமையாததாகும்.

மருந்து சாப்பிடுகிறவன் சாப்பிடும்பொழுது கடவுளின் பிரதிநிதியாக வைத்தியரைத் தொழுது மருந்து சாபபிடவேண்டுமென்றும், வைத்தியர்க்கு வேண்டியவாறு திருப்தி செய்விக்கவேண்டு மென்றும் கூறியிருப்பதைக் காணலாம. இதுகாறும், நாம் இந்துதேச வைத்தியம் மிகப்பூர்வீகமென்றும், இந்துக்கள் மிகவும் பிரபலமாய் வைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்தார்களென்றுங் கூறினோம். இனி இதன் தேய்வைப் பற்றி ஆராய்வோம்.

இவ்வளவு தூரம் விருத்தியடைந்த இந்துதேச வைத்தியம் இதர சாஸ்திரங்களைப்போலவே ஒளிமழுங்கிப்போயிற்று. பௌத்தமதமுண்டாவதற்கு முந்தியே வைத்திய சாஸ்திரத்தைப் பிராமணர்கள் அதிகமாய்க் கற்றுக்கையாண்டு வந்தனர். பின்னர் சிறிது சிறிதாய் அவ்வித்யையை இதரஜாதியார் வசம் ஒப்புவித்து வந்ததாகவும் அவர்களும் அதைக் கிரமமாகவே மகம்மதியர்கள் படையெடுப்புக்காலம்வரை(About 1000 A.D. பரிபாலித்து வந்ததாகவும் தெரியவருகின்றது. மகம்மதியர்கள் இத்தேசத்தின் மீது படையெடுத்து ஜயித்து அரசாட்சி செய்ய ஆரம்பித்தபொழுது தங்களுடன் பாரசீக வைத்தியத்தையும் இந்தியாவிற்குக் கொண்டுவந்தார்கள். அம்மகம்மதிய அரசாட்சியில் இந்து வைத்தியத்திற்கு எவ்வித செல்வாக்குமில்லாமற் போயிற்று. அரசர்களும் பிரபுக்களும் நவீன மகம்மதிய வைத்தியத்தை யபிமானித்து வந்தமையால் இந்துவைத்

தியம் நாளுக்கு நாள் விருத்தியடைய இடமில்லாமற்போனது மன்றி க்ஷயத்தையடையவும் நேர்ந்தது. ஆகவே இந்தியா முழுவதும் இந்து வைத்திய முறைப்படி வைத்தியசாலைகள் வைத்து நடத்தப்பெற்ற பௌத்தர்களின் அரசாட்சி காலத்தில் மிகப் பிரஸித்தி பெற்றிருந்த நம் வைத்தியமானது மகம்மதிய அரசாட்சியின் ஆரம்பத்தில் க்ஷீணகதியடைய ஆரம்பித்தது. (தொடரும்)

இந்து வைத்தி!ாபிமானி.

ஃ.

சூத்ரரும் பாரதசிரவணமும்.

ஆர்யதர்மம் துந்துபி-ஹூ வைகாசிமீ 19-வது ஸஞ்சிகையில் சூத்ரர்களுக்கு வேதாத்யயனம், சிரவணம், யஜநங்களில் அதிகாரமில்லையென்று பிரம்மஸ்ரீ ஆர் நடேசய்யர் அவர்கள் வரைவு ஏற்படுத்தியதோடு நில்லாமல் அவர்களுக்கு பாரதசிரவணத்திலும் அதிகாரமில்லையென்று கூறியிருப்பது விந்தையாயிருக்கிறது. அதற்கு அவர் காட்டியிருக்கும் காரணமும் சாஸ்திரீயமன்று. வேதாந்த இரகசியங்கள் அநேகம் பாரதத்தில் அடங்கி இருப்பதாலும், உபநிஷத்தாக பாவிக்கப்படும் பகவத்கீதையும் அதில் அந்தர்கதமானதாலும் பாரதத்தை ஔபசாரிகமாக ஐந்தாவது வேதமென்று லோகத்தில் வசநிப்பதுகொண்டு, அதை நாம் வேதமென்றும் அதை சூத்ரர்கள் சிரவணாத்யயனம் செய்யக்கூடாதென்றும் சொல்வது சாஸ்திரசம்மதமல்ல. ஸூதஸம்ஹிதை முதலான புராணங்களில் வேத இரகசியங்கள் வெளிப்படையாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அவைகளுக்கெல்லாம் த்ரைவர்ணிகர்தான் அதிகாரிகள்என்றால் அவர்கள் அதற்கு முக்யாதிகாரிகள் ஆகமாட்டார்கள். ஆத

லால் வேதாத்யயன பூர்வகமான கர்மங்களிலும், இந்த விசா ரங்களிலும் ஸ்திரீ சூத்ரர்களுக்கு அதிகாரமில்லையென்று ஸ்ரீமத் பகவத்பாதாசார்யர்களும் ஸித்தாந்தப் படுத்தினர்களேயொழிய, இதிஹாஸபுராண சிரவணங்களிலும், அதனுல் உண்டாகும் மோக்ஷஸாதகமான ஞானஸம்பாத்யத்திலும் ஸ்திரீ சூத்ரர்களுக்கு அதிகாரமில்லையென்பது ஈசுவர கருணைக்கும், ஆர்ய ரிஷிகளின் ஸர்வஜனேபகார மனேபாவத்துக்கும் நேர்விரோதமாகும். மேலும், வேதாத்யயனத்தில் அதிகாரமுள்ளவர்களுக்கு இதிஹாஸ புராண சிரவணம் கௌணமாகும். சூத்ரர்களுக்கு அவை நிஷித்தமாகுமானுல், அவை நிஷ்பலமானவையாகுமாதலால் அதற்கு பிரயோஜனம் இல்லாமற்போகிறது. அது யுக்தமல்ல.

தவிர, அபசூத்ராதிகரணத்தில், ஸ்ரீமத் ஆசார்யாளும், '**श्रावयेच्चतुरो वर्णान्**' என்றதற்கு இதிஹாஸ புராணத்தில் நான்காவது வருணத்தாருக்கு அதிகாரமுண்டு என்று நிச்சயித்திருக்கிறுர்கள். பாரதமோ இதிஹாஸம். ஆகையால் அதின் சிரவணத்தில் சூத்ரர்களுக்கு பூர்ண அதிகாரம் ஸித்தித்திருக்கிறது.

ஸூத ஸம்ஹிதை, சிவமாஹாத்மிய காண்டம், 7-வது முக்திஸாதக அத்யாயத்தில்,

> **"द्विजस्त्रीणामपि श्रौतज्ञानाभ्यासेऽधिकारिता ॥**
> **अस्ति शूद्रस्य शुश्रूषोः पुराणेनैव वेदनम् ।**
> **वदन्ति केचिद्विद्वांसः स्त्रीणां शूद्रसमानताम् ॥**
> **अन्येषामपि सर्वेषां ज्ञानाभ्यासो विधीयते ।**
> **भाषान्तरेण कालेन तेषां सोऽप्युपकारकः ॥**

மேற்கூறிய சுலோகங்களால் வேதவாக்ய சிரவண அத்யயன விசாரங்கள் சூத்ரர்களுக்கு விலக்கேயொழிய இதிஹாஸபுராண மூலமான சிரவண விசாரணைகள் விலக்கல்லவென்று தெளிவா

கும். அதுவும், ஸத்சூத்ரர்களுக்கு கீர்வாணபாஷை மூலமாக வே போதிக்கலாமென்றும், தெரியவருகிறது. ஸூதஸம்ஹிதை பாஷ்யக்காரரான ஸ்ரீமத் வித்யாரணிய ஸ்வாமிகளும்,

"स्त्रीशूद्रद्विजबन्धूनां त्रयी न श्रुतिगोचरा ।
इति भारतमाख्यानं कृपया मुनिना कृतम् " ॥

'ஸ்திரீ சூத்ரர்களுக்கு வேதத்தில் அதிகாரமில்லை. ஆகையால் கருணைகொண்டு முனியால் அவர்களுக்காக பாரதம் சொல்லப் பட்டது' என்று எடுத்துக்காட்டியிருக்கிறார். மற்ற மனுஷ்ய ஸாமான்யத்துக்கு ஸ்வதேசபாஷா மூலமாய் ஞான விசாரம் செய்விக்கலாமென்றும் கூறியிருக்கிறார்கள்.

ஆகையால் சூத்ரர்களுக்கு பாரதத்தில் சிரவணாதிகாரம் இல்லையென்று சொல்வது சாஸ்திரத்துக்கும், அனுஷ்டானத் துக்கும், யுக்திக்கும் ஜீவகாருண்யத்துக்கும் ஒத்ததாகத் தோ ன்றவில்லை.

டி. வி. சாமினாதய்யர்.

கடவுள் வாழ்த்து.

अथाक्षरावलिर्जयत्यकारपूर्विका यथा ।
तथाखिलं चराचरं जगन्महेशपूर्वकम् ॥१॥

எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாகவுடையன. அதுபோல உலகங்கடவுளை முதலாகவுடையது என்பது இதனது பொருள்.

(अक्षराणि) எழுத்துக்கள் अकारादिक्षकारान्तानि அகரம்முதல் க்ஷகாரம் முடிய पञ्चाशत् ஐம்பது.

நாமரூபாத்கமான லோகத்தில் நாமாக்களுக்கு அகரம் காரணம். மேலும் அகரம் பகவத்வாசகம் அவ்வகாரத்தால் வாச்யமான பகவானுக்கும் ஸர்வலோக காரணத்வமானது இதனால் அறிவிக்கப்படுகிறது. நாம ரூபாத்மகமான இருவகைப் பிரபஞ்சத்திற்கும் காரணம் பரமேச்வரனே வாச்யம் வாசகம் இவ்வகளுக்கு அபேதத்தையங்கீகரிப்பதால் இது பொருந்துகிறது. பேதத்தை அங்கீகரித்து உவமை கூறப்பட்டது. जयति என்ற பதத்தில் जि (जय्) என்ற धातु வானது உத்கர்ஷம் என்ற பொருளுள்ளது. காரணத்திலுள்ள மேன்மை கார்யத்தில் உபசரிக்கப்படுகிறது. முன் வாக்கியத்திலுள்ள जयति என்பதை அத்யாஹாரம் பண்ணிக்கொண்டதால் தீபகாலங்காரம். அதாவது, எழுத்துக்கள் அகாத்தை முதலாகவுடையவைகளாய் எப்படி விளங்குகின்றதோ, அப்படி சராசர ரூபமான இவ்வுலகம் கடவுளை முதலாகவுடையதாய் விளங்குகிறது என்று கார்யத்தை லிங்கமாகவுடைய இவ்வனுமானத்தால் தார்க்கிகர்கள் சொல்லுகின்ற ஈசுவர ஸித்தி அனுஸரிக்கப்பட்டது.

ஆனாலும் அவ்வனுமானத்தால் காரணத்திலுள்ள ஏகத்வம் ஸித்திக்காது. ஜகத் சிருஷ்டியானது பெரிய கார்யமானதால் வீடு உப்பரிகை முதலானவைகளின் நிர்மாணம் போல் அனேக கர்த்தாக்களையுடையதாக நேரிடும். ஆகையால் வேதத்தாலும்,

ईश्वरश्चेतनः कर्ता पुरुषः कारणं शिवः ।

என்ற ஸ்மிருதியாலும் ஈசுவரனுக்கு அபின்ன நிமித்தோபாதானம் என்று அத்வைதிகள் கூறும் காரணம் பொருந்துகிறது.

எழுத்துக்கள் அகரத்தை முதலாகவுடையன என்பதற்கு अकारः सर्ववर्णाग्र्यः என்ற ஸ்மிருதியும் பிரமாணமாகிறது.

பாணினி முதலிய முனிவராலியற்றப்பட்ட இலக்கண நூற்களுக்கு மூலபூதமான மஹேச்வர சூத்திரங்களும் அகாத்

த்தையே முதலாவதாகவுடையன. பாலர்களுக்கும் அக்ஷராப்யாஸ காலத்தில் அகாத்தை முன்னிட்டே எழுத்துக்கள் கற்பிக்கப்படுகின்றன.

अग्निमीडे என்று வேதமும் அகரம் முதற்கொண்டே உச்சரிக்கப்படுகிறது.

ஸகல வர்ணங்களின் உற்பத்தியில், மூலாதாரத்திலிருந்து உதானத்தால் அபிவியக்தமான அகாத்திற்கே காரணமாயிருப்பது போல் ஜகத்தின் உற்பத்தியிலும், பிரும்ம விஷ்ணு ருத்திரர்களுக்கு நியாமகரான பரமேச்வரனுக்கே காரணமாயிருத்தல் பொருத்தமாகிறது.

त्रयस्ते कारणात्मानः साक्षाज्जाता महेश्वरात् ।
चराचरस्य विश्वस्य सर्गस्थित्यन्तहेतवः ॥

சராசர ரூபமான உலகத்தையாக்கலளித்தலழித்தல் இவைகளுக்குக் காரணர்களான அம்மூவரும் பரமேசுவரரிடமிருந்து நேராகவே வெளிப்பட்டார்கள் என்று சாஸ்திரத்திலும், காரணமில்லாமல் கார்யம் சித்திக்காதாகையாலும் நித்ய சித்தனுன பரமேச்வானே ஜகத்காரணம் என்று நிலைக்கிறது. மோக்ஷத்திற்குஹேதுவான ஞானத்தின் சாதனங்களில் பக்தியானது அந்தாங்க சாதனமானதால் அந்த பக்தி வரப் போகிற ச்லோகங்களால் நிரூபிக்கப் படுகிறது. அதிலும் முதல் சுலோகத்தில் சேதனு சேதனரூபமான ஸ்கல ஜகத்திற்கும் காரணபூதரான ஈசுவரனுடைய அளவிலா மேன்மை கூறப்பட்டிருப்பதால் அவ்வீசுவரனிடத்தில் பரமாநுராக ரூபமான பக்தி செலுத்தவேண்டியது, புருஷர்களின் கடமை. அந்த பக்தியால் செய்யக் கூடிய பகவத்வந்தனமே, எப்போதும் அசைவற்ற மனதுடன் மானிடரால் செய்யத்தக்கது. அதுவே ஸகலசாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்ததற்குப் பலனுகும். கடவுளிடம் அன்புசெலுத்தாமல் கற்றசாஸ்திரப்பயிர்ச்சி முற்றிலும் வீணேயாகும்.

समस्तशास्त्रचिन्तनैरहर्निशं च किं फलम् ।
महेशपादवन्दनं हृदापि नातनोति चेत् ॥२॥

மெய்யறிவுடைய கடவுளை வணங்காராகில் கற்றதனாற் பயனில்லை என்பதாம்.

हृदम्बुजैकवासिनः पदाब्जमाश्रयन्ति ये ।
अनश्वरा विभान्ति ते निरन्तरे महापदे ॥३॥

கடவுளடிகளைச்சேர்ந்தவர்கள் மோக்ஷத்தில் வாழ்வார்கள்.

महापदे என்பதால் **तद्विष्णोः परमं पदम्** என்ற மோக்ஷசப்தவாச்யமான மறைவசனம் த்வநிக்கிறது. பக்தியுடன் கடவுளிடத்தில் மானஸீகமான ஆராதனஞ் செய்யவேண்டும் என்று பொருள் [அன்பாது நெஞ்சமாகிய] தாமரைமலரின் நடுவில் பகவான் விசேஷமாய் பிரகாசிக்கிறார் என்று உபநிடதங்கள் போதிக்கின்றன.

प्रियाप्रियातिदूरगामरेशपादसेविनाम् ।
पुनर्भवोद्भवं भयं न संभवेत्कदाचन ॥४॥

கடவுளடிகளைச்சேர்ந்தவர்களுக்கு பிறவித் துன்பங்களில்லை.

காயிகமான நமஸ்காரஞ் செய்பவர்களுக்கும் புனர்ஜன்மாவாலாகிய துக்கம் ஏற்படுகிறதில்லை. முக்தர்களாகிறார்கள்.

(தொடரும்)

கே. வி. சுப்பிரமணியசாஸ்திரிகள்.